2003 ஏப்ரல் 23]

[மாண்புமிகு பேரவைத் தலைவர் - தலைமை]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உடுமலைப்பேட்டை தொகுதியிலே அங்கன்வாடி அலுவலகமானது கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பாதியிலே நிற்கிறது. எங்களது கோவை மாவட்டத்தில் மட்டும் 11 இடங்களிலே அங்கன்வாடி கட்டடங்கள் பாதியிலே நிலுவையிலே உள்ளன. அவை உலக வங்கித் திட்டத்தின் மூலமாக கட்டக்கூடியவை. அதற்கு நிதியுதவி வரவில்லையென்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நடப்பாண்டிலே உரிய நடவடிக்கை எடுத்து, அந்தக் கட்டடங்களை இந்த ஆண்டே கட்டிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 290, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

290—

மாணவர் விடுதி

***20964—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சேவூர் பகுதியில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி நடப்பு நிதியாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ மாணவியர் விடுதிகள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 23

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதிக்குட்பட்ட சேவூர் பகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அதிலே ஆதிதிராவிடர் மாணவர்கள் பெரும் பகுதி பயின்று வருகின்றார்கள். வசதியற்ற அடித்தளத்து மக்களின் நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டிலாவது ஆதிதிராவிட நல விடுதியை அமைத்துத் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிடர் நல மாணவ மாணவியரின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக விடுதிகள் ஏற்படுத்தி அவற்றில் தங்கும் இடமும், உணவும் இலவசமாக அரசு வழங்கி வருகிறது. இதன்படி மாநிலத்தில் 1,076 ஆதிதிராவிட நல மாணவ மாணவியர் விடுதிகளும், 26 பழங்குடியினர் மாணவ மாணவியர் நல விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 253 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகள் அனைத்திலும் மொத்தமாக சுமார் 76,932 மாணவர்களும், 44,451 மாணவிகளும் தங்கிப் பயின்று வருகின்றனர். இதுபோக, 49 தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளிலும், மாணவ மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். ஆக, விடுதிகளில் மாணவ மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 1,25,000. இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5-12-2001 முதல் மாதம் 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்கி வருகிறார்கள். இருந்தாலும், நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். மகாலிங்கம்.

முற்பகல் 10-30

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 10 ஆண்டுகளிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே கல்லாதோர் இல்லை என்ற சூழ்நிலையை

2003 ஏப்ரல் 23]

உருவாக்குவதற்காக பல்வேறு நோக்கங்களிலே மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் அவினாசியிலே, தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அந்த மாணவர்கள் மேல்படிப்பு படிப்பதற்காக, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிப்பதற்காக செல்லவேண்டியுள்ளது. அதிக தொலைவு உள்ள கிராமங்களில் உள்ள மாணவர்கள் போக்குவரத்து வசதியும், தங்குமிட விடுதி வசதியும் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு படிப்பு எட்டாத கொட்டாவியாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அடுத்த ஆண்டிலாவது மறுபரிசீலனை செய்து சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக மாணவர்கள் விடுதி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 291, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

291—

சொகுசுப் பேருந்து

***8726—மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு இரவில் ஒரு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,